Thanjavur Sarasvati Mahal Series No. 322.

॥ श्रीः ॥

सङ्गीतमुक्तावलिः

SANGEETHA MUKTAVALI

of

DEVANACHARYA

[NATYA SAṢTRA]

Director

SARASVATI MAHAL LIBRARY

THANJAVUR.

1991] [Price Rs. 45-00

तंजपुरी सरस्वतीमहालयग्रन्थमाला - पुष्पम् सं. ३२२.

॥ श्रीः ॥

सङ्गीतमुक्तावलिः

देवनाचार्यविरचिता

[नाट्यशास्त्रम्]

शिरोमणिबिरुदभाजा
श्री. एन्. वेङ्कटरमणेन
संशोध्य तमिळ् - आङ्ग्लभाषा - प्रस्तावनासहिततया परिष्कृता

0322
Sarasvati Mahal Library. Thanjavur

निर्देशकः (डैरेक्टर)
तञ्जपुरी महाराजशरभोजी सरस्वतीमहाल् ग्रन्थालयः
तञ्जपुरी.

१९९१]

मूल्यम् रू, ४५-००

प्रथमावृत्तिः – १९९१.

प्रकाशनम् :–

तञ्जावूर् महाराजशरभोजी सरस्वतीमहाल् ग्रन्थालय –
कार्यकारिणीसमितिः तञ्जावूर्.

मुद्रकः

लक्ष्मी प्रिण्टर्स्, तञ्जावूर्.

Thanjavur Sarasvati Mahal Series No. 322

SANGEETA MUKTAVALI

of

DEVANACHARYA

[NATYA SASTRA]

★

Edited by :

Sri N. VENKATARAMANAN, B. A.,

Siromani, Guest Editor,

T. M. S. S. M, Library, Thanjavur.

Published By :

DIRECTOR

SARASVATI MAHAL LIBRARY,

THANJAVUR.

1991]

[Price Rs. 45-00

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	Sangeeta Muktavali
Editor	N. Venkataramanan, B. A., Siromani, Guest Editor Sarasvati Mahal Library Thanjavur.
Publisher	M. Sadasivam, Director, Sarasvati Mahal Library Thanjavur.
Publication No.	322
Language	Sanskrit
Edition	First
Date of Publication	June 1991
Paper used	14.2 Kg. D. Demy
Size of the Book	14×21 Cms.
Printing type used	16 Pt.
Number of Pages	276
No. of Copies	500
Price	Rs. 45/-
Printers:	Lucme Printers, 1086, Kakkavattaram Thanjavur-9
Binding	Card Board
Subject	Natya Sastra

PREFACE

—0—

I have pleasure in releasing the book 'SANGITA MUKTHAVALI' which is one of the rare works of Devanachariar dealing with ABHINAYA and not Sangita Sastra. The subject matter of the book is well explained in Tamil and English by the editor in his elaborate introduction.

ABHINAYA means dancing with BHAVA of various RASAS arising from Sathvika, Rajasa and Tamasa gunas.

It is said that the fine art of dancing was staged by BHARATA with the help of Gandharvas and Apsaras and hence the art was named after Bharatha.

The word Bharatha having three letters (BHA-RA-TA) in another way represents BHA = Bhava, RA = Raga and TA = Tala which are the basic requirements for Abhinaya.

In this work the author defines first ABHINAYA NIRNAYA and then he describes various kinds of Anga-Upanga-Prathyanga. Bhowmi gathi - Akasiki Gathi, Margakarana etc. The author also gives short notes on seating arrangements of V. I. Ps and the (artists of) Play-back at the stage.

The editor Sri N. Venkataramanan, B.A., who is a retired Secretary of a Local bank is a scholar in Music and Sanskrit. My thanks are due to him for his sincere enthusiasm in bringing out a rare manuscript dealing with a critical subject. My thanks are also due to Thethiyoor Sri S. Krishnamurthi Sastri, Senior Sanskrit Pandit of Sarasvati Mahal who took special attention in comparing the press copy with the manuscript and correction of proof copies, for his sincere efforts in releasing this manuscript.

My thanks are also due to Lucme Printers of Thanjavur, for their neat printing work.

I express my gratitude to the Government of India for their financial help in publishing rare manuscripts like this.

I hope that this book will be very useful to dancing artists, learners of the art of dancing and hence this will be specially welcomed by them and by lovers of fine arts in general.

Prof. **M. SADASIVAM,**
DIRECTOR,
Sarasvati Mahal Library Society

Thanjavur,
10–6–1991.

முகவுரை

—0—

இசை தோன்றியது :

உலகில் மனிதனுக்குத்தான் எத்தனை ஏற்றம்? இத்தகைய சிறப்பு அவனுடைய பிறப்பினால் மட்டும் ஏற்படுவதில்லை. மனிதனும் பண்டொருநாள் ஏனைய விலங்குகளைப் போன்று தம் உள்ளத்தில் எழும் கருத்துக் களையும், உணர்ச்சிகளையும், பல்வித ஒலிகளை எழுப்பு வதன் மூலமும், தலை, கை, கால் போன்ற உறுப்புக்களை அசைத்தல் மூலமாகவும், வெளிப்படுத்தியிருக்கிறான். மற்றும், தான் மகிழும்போது சில இனிய ஒலிகளை வாயினாலும், பிற சாதனங்களாலும், எழுப்பி, தன் அங்க சேஷ்டைகளையும் செய்தான். இதுவே, பின்னர் நாளடைவில் பல்வேறு கட்டங்களில் ஓர் மொழியெனவும், இசைஎனவும், நாடகம் எனவும் முதிர்ச்சியை அடைந்தது என்று ஆராய்ச்சியாளர் கருதுவர். மனித சமுதாயம் வளர வளர நாகரீகமும்,காலதேசத்திற்கேற்ப இணைந்தே வளரலாயிற்று. கலைகள் பிறந்தன, வளர்ந்தன, மலர்ந் தன. அங்ஙனம் தோன்றிய கலைகளை அறுபத்துநான்கு என வரையறுத்தனர் ஆன்றோர். அவைகளில் ஒப்பற்ற இடத்தைப் பெற்று விளங்குபவன சங்கீதமும் நாட்டியமும் தான் என்றால் மிகையாகாது.

இசை காணும் சிறப்பு :

கலை என்பது மனிதனுடைய ருசிக்கேற்ப, மனோ பாவத்திற்கேற்ப அப்போதைக்கப்போதைய சூழ்நிலை, இடம், காலம் இவற்றையனுசரித்துப் பற்பல மாற்றங் களையும், திருத்தங்களையும் கொண்டு வளருவதாகும். ஆனால், விஞ்ஞானம் என்பது தனக்கென நிர்ணயிக்கப்

பட்ட சில விதிகளையும், நியதிகளையும், எக்காலத்திற்கும் எவ்விடத்திற்கும் ஏற்ற வகையில் அதிக மாற்றங்களுக்கு இடங்கொடாமல் வளர்ந்துவரும் நிலையிலும் நிலைத்த கொள்கைகள் விதிமுறைகள் இவற்றைப் பெற்று விளங்கும்.

சங்கீதமும், நாட்டியமும் கலையாகவும், விஞ்ஞான மாகவும், (சாஸ்திரமாகவும்) அமைந்து ஈடில்லாப்பெருமை யைச் சேர்த்துக்கொண்டன. ஒரு நாட்டின் கலாச்சாரம், நாகரீகம், சமூக வாழ்க்கை போன்றவற்றின் பிரதி பலிப்பாக அமைபவை கலைகளேயாம். பல்வேறு ருசி கொண்டிருப்பினும் பாமரர் முதல் பண்டிதர் வரை அனைவரையும் ஈர்க்கும் இயல்புடையவை சங்கீதமும் நாடகமும்தாம்.

சங்கீதத்தைக் காந்தர்வ வேதம் எனவும் ஸப்தஸ்வர வித்யை எனவும், புகழ்ந்து பேசுவர். நடனத்திற்கான பாட்யத்தை (ஓதுதலை) ருக்வேதத்திலிருந்தும், அபி நயத்தை (சைகை) யஜுர்வேதத்தினின்றும், கீதத்தை (இசை) ஸாமவேதத்தினின்றும், ரஸத்தை (உணர்ச்சி அல்லது அனுபவம்) அதர்வண வேதத்தினின்றும் எடுத்து உருவாக்கினர் என்று சங்கீத நூல்கள் இயம்புகின்றன. அதுமட்டுமல்ல. நாட்டியம் ஆடுபவனின் இடுப்பிற்குக் கீழ் உள்ள பகுதியைப் பிரமனாகவும், இடுப்பிற்குமேல் தோள்வரை திருமாலாகவும், தலையினை ஈசனாகவும் ஆக மும்மூர்த்தி வடிவில் பாவித்து மதிக்கவேண்டும் என்று சங்கீத சாஸ்திரங்கள் கூறுவதினின்று இவ்வாடல் கலை எத்துணைச் சிறப்புப் பெற்றது என்பதனை அறிய முடிகிறது.

நாட்டியம் மலர்ந்தது :

இத்தகைய நாட்டியக் கலை, பிரமன் முதன் முதலில் பரதமுனிவருக்கு உபதேசிக்க, அவர் கந்தர்வர்களையும்

அப்ஸரஸ்களையும், சேர்த்துக்கொண்டு சிவபெருமான் திருச்சன்னிதியில் ஆடிய காரணம் பற்றி இந்நாட்டியத்தைப் பரதநாட்டியம் என அழைக்கலானார்கள். மற்றும் 'ப' என்பது பாவத்தையும், 'ர' என்பது ராகத்தையும், 'த'என்பது தாளத்தையும் குறிப்பாக அமைந்து நாட்டியத்திற்குத் தேவையான பாவம், இசை, தாளம் இம்மூன்றின் சேர்க்கையே 'பரதம்' என குறிக்கப்படுகிறது.

இவ்வாறான நடனமே நாட்டியம், நிருத்தியம், நிருத்தம், எனப்பிரிக்கப்பட்டன. சீரியமுறையில் அமைத்து ஆடப்பெற்ற நாட்டியமே பின்னர் நாடகங்கள் தோன்றக் காரணமாயிற்று. சங்கீதரத்னாகரத்தை எழுதிய சார்ங்க தேவர் கைஜாடைகளால் உண்டாக்கக்கூடிய 'பாவாபிநயமே' நிருத்யம் என்கிறார். நிருத்தியத்துடன் கூடிய நாடகத்திற்குத்தான் நாட்டியம் என்று முன்பு வழக்கு இருந்தது. எனவே, நாடகத்தை நாட்டியமாகவே பண்டைய காலத்தில் ஆடிக்காட்டினர். வடமொழி நூல்களில் நாடகம் நடிக்கப்பட்டது என்று கூறாமல் நாடகம் நாட்டியமாடப்பட்டது என்று கூறப்பட்டதே இதற்குச்சான்றாகக்கூறலாம். இதன் அடிப்படையில்தான் தமிழ்நாட்டில் குறவஞ்சி நாடகமும், பாகவதமேளாவும், மலையாளத்தில் கதகளி சாக்கியர் கூத்தும், கர்நாடகத்தில் யட்சகானமும், ஆந்திரத்தில் கூயச்சுப்பூடியும், (குச்சுப்புடி) தோன்றின. மற்றும் தமிழ்நாட்டில் பின்னணிப் பாட்டுடன் ஒன்று அல்லது இரண்டு நடிகைகள் நின்றாடுதலைச் 'சதிர்' என்று அழைத்தனர். அதே போன்று ஆண்,பெண் இருபாலாரும் சேர்ந்து ஆடுதலைப் 'பள்ளு'எனவும் இயம்பினர். ஆடற்கலை பாரதத்துணைக் கண்டத்தில் ஒவ்வோர் மாநிலத்திலும் வெவ்வேறான பெயர்களால் வழங்கப்பட்டாலும், அடிப்படை ஒன்றே. அஸ்ஸாமின் மணிப்புரிநடனம், குஜராத்தின் ராஸலீலை மற்றும் கர்பா நடனம், ஒரிஸாவின் பல்வித நாட்டிய நாடகங்களும் சிறப்பாகப் போற்றப்படுகின்றன.

உள்ளத்தில் எழும் உணர்வுகளைக் காண்போருக்குத் தம் சைகைகள், முகபாவம் போன்றவற்றால் வெளிப் படுத்தும் பாங்கிற்கு நிருத்யம் எனப்பெயர். ரஸம், பாவம் இவை இன்றி லயத்தை மட்டுமே முக்கியமாகக் கொண்டு தாளக்கட்டுடன் ஆடுதலை 'நிருத்தம்' என்பர். அதாவது பாடுவதற்கேற்ப தாளக் கட்டுடன் கால் களால் லயத்துடன் கூடிய அடைவு பிடித்து சாரி நடை, குதித்தல், பாய்தல், வளைதல் சுற்றுதல் போன்ற உடற் செயல்களுடன் ஆடுவதே நிருத்தமாகும்.

நாடக பாத்திரங்கள் சரீர. ஆத்மீக நிலைகளைப் பாவவடிவில் சபையோர் கண் முன் வெளிப்படுத்துவதே அபிநயம் என்று அழைக்கப்படுகிறது. அதாவது சிருங்காராதி ரஸங்களையும், உணர்ச்சிகளையும், அங்க அசைவுகளால் நிரூபணம் செய்வதே அபிநயமாகும். (அபி-நீயதே - சபையோர் முன் கொண்டுவரப்படுகிறது என்பதால் அபிநயமாகிறது).

தாண்டவம் என்பது ஆண்களுடைய நடனமாகும்! பெண்டிர் ஆடலை லாஸ்யம் என்பர். முன்னர் பரத முனிவருக்கு பார்வதீதேவீ லாஸ்யத்தை உபதேசித்துப் பின்னர் உஷாவிற்குக்கற்பித்தார், தொடர்ந்து உஷா துவாரகை கோபியர்களுக்கு உபதேசித்ததாகவும். அக் கலையை சௌராஷ்டிரப்பெண்கள் கற்று வெளியுலகத்தில் பரப்பியதாகவும் கூறுவர்.

நூலாசிரியர் அறிமுகம்

அபிநயம் என்பது பற்றி விளக்கும் பல நூல்களில் ஒன்றாக அமைந்தது ''ஸங்கீத முக்தாவளி'' என்பது. இதனை விஜயநகர அரசர் ப்ரௌட தேவராஜன் சபையை அலங்கரித்த (1406-1422. கி.பி) தேவனா-

சார்யார் என்பவரே வடமொழியில் செய்யுள் வடிவில் இயற்றியுள்ளார். ''ஸ்மிருதி சந்திரிகா'' என்ற நூலை எழுதிய தேவனா(த)பட்டர் என்பவரும் இவரே என்று ஆன்றோர் கருதுகின்றனர். அவரை தேவேந்திராசார்யர் என்று அழைப்பதும் உண்டு. மாபெரும் புலவரான 'ருத்ரன்' என்பவருடைய மாணாக்கராக இவர் திகழ்ந் தவர். ஆடல், பாடல், வாத்யம், இம் மூன்றிலும் இரத்தினமாக விளங்கிய காரணத்தால் இக்கவி தன்னை ''தௌர்யத்ரிக சிந்தாமணி'' என்று அழைத்துக் கொண்டார்.

பண்டை நாட்களில் இசை, நிருத்யம், வாத்திய சங்கீதம் இம்மூன்றையுமே சங்கீதம் என்று அழைத்த காரணத்தால் இந்நூலாசிரியர் தேவனாசாரியார் தம் நூலுக்கு ''ஸங்கீத முக்தாவளி'' என்று பெயரிட்டிருப் பினும், அதில் இசையைப் பற்றியோ, இசைக் கருவி களைப் பற்றியோ கூறாமல் ''ஆடற்கலை'' ஒன்றை மட்டும் பொருளாகக் கொண்டு, நிருத்த பேதங்கள், பாத்திர லக்ஷணம், ஸ்தான லக்ஷணம், ஆஸன லக்ஷணம், கதி லக்ஷணம், சரணலக்ஷணம் போன்றவற்றைக் குறிப்பாகத் தொட்டுக் காண்பித்து நிருத்தாங்கங்களின் லக்ஷணங்களைத் தெளிவாகவும், வெகு விரிவாகவும் எடுத்துக் கூறியுள்ளார்.

''ஸங்கீத முக்தாவளி'' நூலில் காணக் கிடைக்கும் விஷயங்களின் சுருக்கம்.

1. அபிநய நிர்ணயம் :

ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணத்தின் அடிப் படையில் எழும் சிருங்காராதி நவரஸங்களிலிருந்து ஏற்படும் பாவத்துடன் ஆடுதலே அபிநயம் எனப்படும். இது ஆங்கிகம், வாசிகம், ஆஹார்யம், ஸாத்விகம், என நான்கு வகைப்படும். ஒரு குறிப்பிட்ட பாத்திரம்

எப்படிப் பார்வைக்கு அமைதல் வேண்டும், எப்படி நடித்தல் வேண்டும், எங்ஙனம் பாவங்களைக் கொள்ள வேண்டும், அப்பாவங்களை எப்படி அங்க அசைவுகளால் வெளிப்படுத்த வேண்டும். இது போன்ற நியதிகளை விளக்குவது ஆங்கிசமாகும். அதாவது உடலின், அங்கங்களை அங்கம், பிரத்யங்கம், உபாங்கம் என மூன்று வகையாகப் பிரித்து அவ்வங்கங்களை முக்கியமாகக் கொண்ட அபிநயத்தை ஆங்கிகம் என்றழைத்தனர்.

உச்சரிப்பு, சப்த பேதங்கள், பாஷை நயம், ஓசையின்பம் முதலியவற்றை ஓர் நியதிக்குக் கட்டுப்படுத்திய நிலையில் ஆடப்பெறுவது வாசிக அபிநயமாகும்.

நடிகர்களின் உடை, அலங்காரம் முதலியவற்றை நிர்ணயிப்பதுடன் ஒரு பாத்திரத்தின் இனம், சமயம், சமூகத்தில் ஸ்தானம் இவற்றைப் பாகுபாடு செய்துகாட்ட எவ்வகையான அலங்காரத்தை (ஒப்பனையை) மேற்கொள்ள வேண்டும் என்பதைத் தெளிவாக விளக்குகிறது ஆஹார்யாபிநயமாகும்.

சமாதிநிலை, வியர்த்தல், மயிர்க்கூச்சம், குரல் மாற்றம், நடுங்குதல், முகப்பொலிவுமாற்றம், கண்ணீர் வடித்தல், மயக்கமுறுதல் போன்ற ஒரு மனிதனின் எண்வகை மானோநிலைகளை வெளிப்படுத்தும் முறையை உணர்த்துவது ஸாத்விகாபிநயமாகும்.

மேற்கூறிய பிரிவுகளன்றி இஃது உத்தமம், மத்யமம், அதமம் என்றும், முக்கியத்துவத்தைப் பொறுத்து வாக்பிரதானம், அங்கப்பிரதானம், அபிநயஸத்வ ப்ரதானம் எனவும் இவ்வபிநயம் வகுக்கப்பட்டுள்ளது. இதில் ஆங்கிகம், என்ற அபிநயம் அங்குரம், குசா, சாளா, நாட்யோதயம். நிருத்யர்ங்குரம், என ஆறு உட்பிரிவு

களைக் கொண்டதாம். இஃதன்றி ஆத்மஸ்தம், மத்யஸ்தம், பரஸ்தம் என்ற பிரிவுகளையும் தனக்குள் கொண்டுள்ளது.

பொதுவாகப் பல்வேறு உணர்வுகளையும், ஆகாயம், பூமி, 'கடல் உதயம், அஸ்தமனம், நகரம், தேவர்கள், அரசன், ஸ்த்ரீ, பல்வேறு மிருகங்கள் பக்ஷிகள் இவை போன்றவற்றின் பெயரைக் கூறாமல் ''சாடை''யைக் கொண்டு பொருளுணரச் செய்வதே அபிநயமாகும்.

நிருத்தம் என்ற அபிநயம் ப்ரேரணம், ப்ரேங்கணம் குண்டலீ, தாண்டராஸகம் என நான்கு பிரிவுகளைக் கொண்டது.

இசைக்கருவிகளின் சொற்களுக்கேற்ப ஓர் ஸாமானிய ஆடவன் தன் பல்விதக்கால் அடிகள், இடுப்பு, முழங்கால் போன்றவைகளின் அசைவுகளைக் காட்டி ஆடுதல் ப்ரேரணமாகும்.

ஆண், பெண் இருபாலாரும் இசை மற்றும் இசைக் கருவிகளுடன் தம் கற்பனைக்கேற்பப் பலவித ரஸபாவங் களைக் காட்டி ஆடுதல் ப்ரேங்கணம் என்றழைக்கப்படும்.

கர்நாடகப் பெண்டிர் அனையத் தம்மை அலங்கரித்துக் கொண்டு சிருங்காரரஸம் ததும்ப மென்மையிளிர ஆடுதல் குண்டலீ எனப்படும்.

கோபியருடன் கண்ணன் விளையாடிய கோலாட்ட லீலை (ராஸலீலை) தாண்டராஸகம் அல்லது தாண்ட லாஸ்யம் என வழங்கப்படுகிறது. இது பதினாறு அங்குல நீளமும், இரண்டு அங்குல பருமனும் கொண்ட பல நிறங்கள் தீட்டப்பட்ட குச்சிகளைக் கையில் கொண்டு ஸ்த்ரீகள் தம் தலை, இடுப்பு இவைகளை அசைத்து

இசைக்கேற்பக் கொட்டி ஆடுதல் ''தாண்ட ராஸகம்'' எனப்படும்.

மேலும் விருத்தங்கள் போன்ற லயம் (தாளக்கட்டு) இல்லாதவற்றை இசைக்க அவ்விசைக்கேற்பப் பொருள் விளங்குமாறு பொருத்தமான பாவங்களை வெளிப்படுத்தி ஆடுதலை ''கீதானுகம்'' (இசையையனுசரித்து) என்றும் வாய்ப்பாட்டே இன்றி இசைக்கருவிகளின் தாள ஒலிகளை மட்டும் பின்பற்றி ஆடுதலை ''வாத்யானுகம்'' என்றும், தாளக்கட்டோடு கூடிய பாடல்களுக்கேற்ப வாய்ப்பாட்டு, வாத்தியங்கள் இவ்விரண்டையும் பொருத்து ஆடுதலைக் கீதவாத்யானுகம் என்றும் நூலாசிரியர் வகைப்படுத்து கிறார்.

நிருத்தாங்கங்கள் :

அபிநயத்திற்கு முக்கிய உறுப்புக்களாகக் கருதப் படுபவை தலை, கழுத்து, மார்பு, இரு விலாப்புரங்கள், இடுப்பு, பாதம், இவையாகும் (சிலர் இருதோள்களையும் சேர்ப்பர்)

ப்ரத்யங்கங்கள் :-

கழுத்து, புஜங்கள், முதுகு, வயிறு, துடைகள், முழங் கால்கள் முதலியனவாம்.

உபாங்கங்கள் :-

பார்வை, கண்கள், இமைகள், கருவிழிகள், கன்னங் கள், மூக்கு, மூச்சு, பற்கள், உதடுகள், நாக்கு, முகவாய்க் கட்டை இவை முகத்திலுள்ளவையாம்.

இவையன்றி மணிக்கட்டுகள், முழங்கால்கள், ஆபரணங்கள், ஆகிய மூன்றும் உபாங்கங்களாகச் சேர்க்

கப்படுகின்றன. மேலும், உடலிலுள்ள ஏனைய உறுப்புக்களான குதிகால்கள், கணுக்கால்கள். கால் விரல்கள், கைவிரல்கள், உள்ளங்கைகள், உள்ளங்கால்கள் இவையும், அபிநயத்தில் உபாங்கங்களெனக் கொள்ளப்படுகின்றன.

சிரோபேதங்கள் (தலையின் அசைவுகளும், அவைகளின் நிலைகளும்)

அபிநயம் செய்யுங்கால் நிகழும் அசைவுகளைத் துதம், விதுதம், ஆதூதம், அவதூதம், கம்பிதம், ஆகம்பிதம் உத்வாஹிதம், பரிவாஹிதம், அஞ்சிதம், நிகுஞ்சிதம், பராவிருத்தம், உத்க்ஷிப்தம், அதோமுகம், லோலிதம் எனப் பதினான்காகப் பிரிப்பர். மற்றும், அசைக்கப்படும் தலையின் போக்கை அனுசரித்து திர்யங்நதோன்னதகம், திர்யக்கதம், உன்னதம், ஸ்கந்தானதம், ஆராத்ரிகம், ஸமம், பார்ச்வாபிமுகம் என ஏழு வகையாகவும் பிரிப்பர்.

ஹஸ்த லக்ஷணமும் — நிருத்தாங்கலக்ஷணங்களும்

அபிநயத்தில் கையாளப்படும் கை அசைவுகளுக்கான முத்திரைகளை அஸம்யுத ஹஸ்தம் (ஒற்றைக் கைகள்) என்றும், ஸம்யுத ஹஸ்தம் (இரட்டைக் கைகள்) எனவும் பெரும் இருவகையாக வகைப் படுத்துவர். அவைகளில் ஒரே கையினை அசைப்பதில் முப்பத்திரண்டு விதங்கள் உள்ளன. அவையாவன பதாகம், த்ரிபதாகம், கர்த்தரீ முகம், அர்த்தசந்திரம், அராளம், முஷ்டி, சிகரம், கபித்தம் கடகாவக்திரம், சுகதுண்டம், காங்கலம், பத்மகோசம், அலபல்லவம், சூசீமுகம், சர்ப்பசிரசு, சதுரம், மிருகசீருஷம், ஹம்ஸாஸ்யம், ஹம்ஸபக்ஷம், பிரமரம், முகுளம், ஊர்த்வ நாபம், ஸந்தம்சகம், தாம்ரசூடம், வராபயம் நிகுஞ்சம் த்விசிரம் பாணஹஸ்தம் ஸிம்ஹாஸ்யம் மயூரம், அர்த்தபதாகம், ஸூசி என்பனவாகும். அதே போன்று இரட்டைக்கைகள் (ஸம்யுத ஹஸ்தங்கள்) புஷ்பபுடம்,

அஞ்சலி, கபோதம் கர்கடம் ஸ்வஸ்திகம் டோலம் மகரம் வர்தமானகம் கஜதந்தம் கடகாவர்தமானகம் நிஷதம் உத்ஸங்கம் அவஹித்தம் பதாகாகர்த்நரீ என்றும் பிரித்துள்ளனர்.

வாயால் கூறாமல் அபிநயம் மூலம் விளக்கப்பட வேண்டிய பொருள்கள் ஒவ்வொன்றையும் எப்படிக் கை சாடை மூலம் காண்பிப்பது, அல்லது மனோ பாவத்தை எங்ஙனம் கைசாடை கொண்டு வெளிப்படுத்துவது என்பதை விளக்குவதே ஹஸ்தலக்ஷணங்களின் பயனாம். இஃதன்றி ஸாமான்ய நிருத்தத்திற்கு மட்டும் பயன்படக்கூடிய ஹஸ்தங்களையும் நூலாசிரியர் விளக்கியுள்ளார்

இது சதுரச்ரம், உத்திருதம், தலமுகம், ஸ்வஸ்திகம், விப்ரகீர்ணம், அராளகடகாமுகம், ஆவித்தம், வக்ரம், ஸூச்யாஸ்யம்,ரேசிதம்,அர்த்தரேசிதம்,நிதம்பம்,பல்லவம் கேசபந்தம்,கர்த்தரீமுகம்,உத்தானவஞ்சிதம்,லதாஹஸ்தம் கரிஹஸ்தம், பக்ஷவஞ்சிதம், பக்ஷப்ரத்யோதகம், தண்டபக்ஷம், கருடபக்ஷகம் ஊர்த்வமண்டலீ, பார்சுவமண்டலீ, உர:பார்ச் வார்தமண்டலம், முஷ்டிகஸ்வஸ்திகம், நளினீ பத்மகோசம் அலபத்மம், உத்பாணம், லலிதம் என, முப்பது வகைப்படும். இவையன்றிக் கைகளை நீட்டுதல் சுழற்றுதல், மேலும் கீழும் அசைத்தல், பக்கவாட்டில் அசைத்தல் போன்றவைகளை ப்ரஸாரணம், கூர்ணனம் பிரமணம், ஸம்ஸ்நதி, விச்புதி, லுடனம், பார்ச்வாத் பார்சுவகதி ஊர்த்வாதோகதி என்று எட்டு வகையாகவும் நூலாசிரியர் பிரித்துள்ளார். அதுடன் ஹஸ்தசாரங்கள் பதினைந்து குறிப்பிடப்பட்டுள்ளன.

ஹஸ்தகர்மா

தொடர்ந்து நூலாசிரியர் ஹஸ்தகர்மாவாக இருபது விதங்களை தூனனம் ஸம்சிலேஷம், விச்லேஷம்

ஆக்ஷேபம், ரக்ஷணம், மோக்ஷம், நிக்ரஹம், பரிக்ரஹம், உத்கிருஷ்டி, ஆகிருஷ்டி, விகிருஷ்டி, தாடனம், த்ரோடனம், சேதனம், பேதனம், ஸ்போடனம், மோடனம், விஸர்ஜனம், ஆஹ்வானம், தர்ஜனம், என்று கூறி விளக்கமும் கூறுகிறார்.

அபிநயத்தில் ஏற்படும் மார்பு அசைவுகளான ஸமம், ஆபுக்னம், நிபுக்னம், ப்ரகம்பிதம், உத்வாஹிதம், என்பன வற்றை விளக்கி தொடர்ந்து உன்னதம், ப்ஸாரிதம், நமிதம், விவர்த்திதம், அபஸ்ருதம் என்ற ஐந்து வகைப் பார்சுவங்களின் இலட்சணங்களைக் கூறுகிறார்.

தொடர்ந்து கம்பிதா, உத்வாஹிதா, சின்ஹா, விவிருத்தா, ரேசிதா என்ற ஐந்து வகை இடுப்பு நெளிவு களின் இலட்சணங்களை நூலாசிரியர் விவரிக்கிறார்.

ஆடலின் மற்றோர் முக்கிய அம்சமான பாதங்களை ஸமம், குஞ்சிதம், ஸூசி, அக்ரதலஸஞ்சரம், உத்கட்டிதம், அஞ்சிதம் என்று ஆறுவகையாகப் பிரிக்கும் நூலாசிரியர் மற்ற சிலரின் கருத்துப்படி த்ராடிதம் கட்டிதம், கடிதோத் ஸேதம், மர்திதம், அக்ரம், பார்ச்வகம், பார்ச்வஸ்திதம் என ஏழுவகைப் பாதங்களினுடையவும் இலட்சணங்களைத் தெளிவாகக் காட்டியுள்ளார். அத்துடன், தொடர்ந்து ஸ்திதி சலனம், ப்ரமணம், ஓடனம், உத்க்ஷிப்தம், அவ க்ஷேபம், தாடனம் பூமிகுட்டனம், ஸம்சிலேஷம்.விச்லேஷம் ஸரணம், ப்ரஸாரணம், ஆக்ஷேபம், விக்ஷேபம், டோலனம், பரிவர்த்தனம், ப்லுதிகம்பிதம், கர்ஷணம், மர்தனம், வேஷ்டனம், விஷமசஞ்சாரம், சங்கிரமணம் என இருபத்து நான்கு பாதசாரங்களை (Steps) விளக்கிக் கூறுகிறார்.

நர்த்தகியின் தோள்களை ஸமம் எகோச்சம் கர்ண லக்னம், லோலிதம், ஸ்ரஸ்தம், உச்ரிதம், த்ர்யச்ரம் என ஏழு வகைகளாக விளக்கி நிருத்தாங்கங்களில் பிரதான

உறுப்புக்களின் லக்ஷணங்களின் விவரணத்தை நூலாசிரியர் முடிக்கிறார்.

தொடர்ந்து ப்ரத்யங்கங்களின் இலட்சணங்கள் விளக்கப்படுகின்றன.

ப்ரத்யங்க லக்ஷணங்கள்

கழுத்து

இவை ஸிமா, நிவிருத்தா, லலிதா, ரேசிதா, அஞ்சிதா த்ர்யச்ரா, நதா, உன்னதா, ஆகுஞ்சிதா, கம்பிதா எனப் பத்து வகைகளாகும்.

பாஹு (புஜம்)

இது ஊர்த்வஸ்தம், அதோகதம், பச்சாத்கதம், திர்யக்பார்ச்வகம், புரோகதம், அஞ்சிதம், ஸ்வஸ்திகம், உத்வேஷ்டிதம், உபவேஷ்டிதம், லுடிதம், மண்டலகதி அபவித்தம், ஆவித்தம், ஸரளம், நம்ரம், குஞ்சிதம், ஆந்தோளிகம், உத்ஸாரிதம், வலிதம், வலிதவர்த்திதம், சித்ாம் என்று இருபத்திரண்டு வகை கொண்டதாகும்.

ப்ருஷ்டம் (புட்டம்/back)

இது லலிதம், வலிதம், நதம், ஸமம் என நான்கு வகைப்படும்.

வயிறு

ஸமம், கல்லம், சஞ்சலம், பூர்ணம், க்ஷாமம், என்று ஐந்து விதங்களாம்.

பின்னர் நூலாசிரியர் கம்பிதம், வலிதம். ஸ்தப்தம், உத்வர்த்திதம், நிவர்த்திதம் என (நர்த்தகியின்) துடை

அசைவுகளையும்,உத்க்ஷிப்தா நதாக்ஷிப்தா,ஆவர்த்திதா, பரிவர்த்திதா, நிஃஸ்ருதா, திரஸ்ச்சீனா பராவிருத்தா கம்பிதா உதிதா என பத்துவித முழங்கால் லக்ஷணங்களையும் தெளிவுபடுத்துகிறார்.

அடுத்து, ஸமம், ஸம்ஹதம், குஞ்சிதம், அர்த, குஞ்சிதம், உன்னதம், ஆனதம், விவிருதம் என ஏழுவகை ஜானுவும், (முழங்கால் சந்தி) நிகுஞ்சம், ஆகுஞ்சிதம், ப்ரமிதம், ஸமம், சலம் என்ற ஐந்து வகை மணிக்கட்டுகளும் விளக்கப்பட்டு ப்ரத்யங்கங்களின் விவரணம் முடிவு பெறுகிறது.

உபாங்க லக்ஷணங்கள்

கண்கள்

முகத்தில் மட்டும் உள்ள அங்கங்களே உபாங்கங்களாம். சிருங்காரம், வீரம், கருணா, ஹாஸ்யம், ரௌத்ரம், பயானகம், பீபத்ஸம், அத்புதம் என்ற எண் வகை ரஸங்களை வெளிப்படுத்தும் கண்களை முப்பத்தாறு பேதங்கள் கொண்டவைகளாகவும், அடுத்து பதிதா ஸஹஜா உத்க்ஷிப்தா, ரேசிதா, குஞ்சிதா, ப்ருகுடீ, சதுரா என ஏழுவகையான கண்புருவ நெளித்தலையும் விவரித்து ப்ரஸ்ருதம், குஞ்சிதம்,விவர்த்திதம், விதாதடிம், பிஹிதம், ஸ்புரிதம், உன்மேஷிதம், நிமேஷிதம், ஸமம் என ஒன்பது வகையான கண்ணிமைகளுக்கான இலட்சணங்களையும் குறிப்பிடுகிறார். பின்னர், கருவிழிகளின் செயல்களை (நோக்குகளை) ப்ரமணம், வலனம், ஸமுத்விருத்தம், பாதம், சலனம், ப்ரவேசனம், பரிவர்த்தனம், நிஷ்கிராமம், ப்ராக்ருதம் என்று வகைப்படுத்தி அக் கருவிழிகளை, சிருங்காராதி ரஸங்களுக்கேற்ப எவ்வாறு அசைக்கவேண்டும் என்பதையும் நூலாசிரியர் விளக்குகிறார். அத்துடன் மேற்கூறியவாறு விஷயாபிமுகமான

கருவிழிகளின் சேட்டைகளை ஸமம், ஸாசி, ஆலோகிதம், ப்ரவிலோகிதம், விலோகிதம், உல்லோகிதம், அனு விருத்தம், அவலோகிதம் என்று எட்டுவிதமாக விளக்கு கிறார்.

கபோலம் (கன்னங்கள்)

கன்னத்தை ஸமம், குஞ்சிதம், ப்புல்லம், பூர்ணம் க்ஷாமம், கம்பிதம், என அறுவகையாக விவரித்து, ஸமா, நதா, மந்தா, விகிருஷ்டா, விகூணிதா, உத்புல்லா என்று ஆறுவகையாக மூக்கின் லக்ஷணங்களையும் ஆசிரியர் கூறுகிறார்.

அடுத்து ஸமம், சலம், ஸ்தப்தம், நிரஸ்தம், ஸ்தா பிதம் அல்லது உல்லாஸிதம், விமுக்தம், விஸ்மிருதம், ஸ்கலிதம், பிரஸ்ருதம் என்றும் அவைகளோடு இணைந்த தாக ப்ராந்தம் ஆந்தோளிதம், பூத்கிருதம் ஸீத்கிருதம் என்பவைகளையும் அடக்கி மூச்சுக் காற்றின் லக்ஷணங் களை விளக்குகிறார்.

இவைகளின்றி நர்த்தகியின் முகவாய்க் கட்டையை ச்வஸிதம் வலிதம் வக்ரம் ஸ்புரிதம் ஸம்ஹதம் சலம் வ்யா கீர்ணம் போன்று வகைப்படுத்தியதுடன் புக்னம், வியா புக்னம், உத்வாஹி, விவிருதம், விதுதம், விநிவிருத்தம் என்ற அறுவகை முக லக்ஷணங்களையும் நூலாசிரியர் தெளிவாக்குகிறார்.

தொடர்ந்து பார்ஷ்ணி, ஸமுத்கம் விகாஸீ ஆயதம் போன்ற கீழ் உதடுகளின் வகைகளும், குட்டனம், கண்டனம், ஸமம், தஷ்டம், நிகர்ஷணம், சின்னம், தம்சனம், சுக்கிதம் என்ற எண்வகைப் பற்களின் செயல் களும், மேலும் அறுவித நாக்குகளின் லக்ஷணங்களும் இறுதியாகக் கூறப்பட்டு உபாங்கங்களின் வருணனை இனிது நிறைவு பெறுகிறது. கைவிரல்களை முன்னரே

வகைப்படுத்திக் கூறியவாறு ஈண்டு அறுவகைக் கால் விரல்களையும் அறுவகை உள்ளங்கால்களையும் சுருக்க மாகக் கூறியுள்ளார்.

இவ்வாறு அனைத்து அங்கங்களின் லக்ஷணங்களை வெளிப்படுத்திய பின்னர் நர்த்தகி தன் மனோவிருத்தியை யும் ரஸங்களையும் முகபாவத்தினால் வெளிப்படுத்த வேண்டி எந்தெந்த நிறமுகப் பூச்சுகளை உபயோகிக்க வேண்டும் என்பதையும் நூலாசிரியர் குறிப்பிடுகிறார்,

நிருத்த கதிகள்

பின்னர் நிருத்த ஆரம்பத்தில் அரங்க மேடையில் நர்த்தகி நிற்கவேண்டிய இடம், அதே போன்று ஆட்டம் முடிவில் நிற்கவேண்டிய இடம் இவைகளும் விளக்கப் பட்டுள்ளன. இவ்வத்தியாயத்தைத் தொடர்ந்து அங்கம், உபாங்கம், பிரத்யங்கங்கங்களால் ஏற்படும் பலவித கதிகளை "சாரி" எனக் குறிப்பிட்டு அதனைப் "பூமிகதி" என பதினாறு வகைகளாகவும் " ஆகாசிகீகதி " எனப் பதினாறு வகைகளாகவும் நூலாசிரியர் பிரித்துக் காட்டுகிறார்.

அடுத்து, அந்தந்த தேச அரசர்களால் அவரவர்கள் சம்பிரதாயப்படி தம் தாய்மொழியில் பாடி ஆடுதலை "தேசீ நிருத்தம்" எனக் குறிப்பிட்டு ரதசக்ரா முதலிய நாற்பத்தைந்து விதங்களை பௌம்ய வகைகளாகவும் ஆகாசிக முதலிய இருபது விதங்களை ஆகாசிக வகையாகவும் பிரித்து அதற்கான லக்ஷணங்களையும் நூலாசிரியர் விளக்கியுள்ளார்.

தொடர்ந்து ரேசகங்களை கண்டரேசகம், ஹஸ்த ரேசகம், பார்தரேசகம் என்றும் அதன் செயல்களை ப்ரமணம் தூனனம் நிர்கதி, கதி, உத்கதி, அதோகதி திர்யக்கதி கம்பனம் என்று எண்வகையாகவும் குறிப்பிடு கிறார்.

பாதநிகுட்டனம் என்ற சாரி வகைகளை இலக்கணத்துடன் கூறி சிருங்காரம், வீரம், கருணா, அத்புதம், ஹாஸ்யம் பயானகம் ரௌத்ரம் பீபத்ஸம் ஆகிய எண் வகை ரஸங்களின் தன்மையையும், அது வெளிப்படும் நிலையான ஸ்தாயீபாவம், வியபிசாரிபாவம் போன்றவற்றையும், அந்தந்த ரஸங்களுக்கேற்ற நிருத்தகதிகளின் லக்ஷணங்களையும் தெளிவாகக் கூறுகிறார்.

பலவித தாளக்கட்டுகளுடன் கூடிய இந்த நிருத்த கதிகள் ருஜு, வக்ரா, கோணப்ரஸாரிணீ, சிருங்கலா, ஸங்கினீ, ஸ்வஸ்திக,சாரணீ, வக்ரகோணா, பார்சுவ சாரா, மண்டலீ. அர்த்த மண்டலீ, திர்யஸ்ரா, சதுரஸ்ரா, நாகபந்தா, ஆவித்த ஸ்வஸ்திகா. கிரமபார்சுவபிரதர்சினீ பரிப்ரமணசாரா, வியாகீர்ணபதஸஞ்சாரா, கஞ்சிகா, மதாக்ராந்தா, ஸம்புடசாரிணீ, விசக்தி என இருபது வகைப்படும் என்பதை லக்ஷணங்களுடன் நூலாசிரியர் விளக்கியுள்ளார்.

அத்துடன், பரத நாட்டியத்தின் ஓர் முக்கியப் பகுதியான மார்ககரணங்கள் ஒரு நூற்று இருபதை விளக்கி தேசீகரணம் அல்லது உத்ப்லுதி கரணங்களான இருபத்தி ஒன்றினையும் விவரித்துள்ளார். அடுத்து, நிருத்தத்தில் உடலைச் சுழற்றுவதை, ப்ரமரீ, எனப் பெயரிட்டு அதனை முப்பத்திரண்டாகப் பிரித்து ஆடலில் ஓர் வியப்பினை சபையோர்களுக்கு உண்டாக்குவதே இந்த ப்ரமரியின் பயன் எனவும் தெளிவு படுத்தியுள்ளார்.

பௌம்யம் ஆகாசிகீ என்ற தலைப்பில் பல்வித மண்டலங்களை விளக்கிஅங்கஹாரம் முப்பந்திரண்டினை விவரித்துள்ளார்.

சிக்ஷாவிதி ;

பின்னர் "சிக்ஷாவிதி" என்ற தலைப்பில் ஆடல் தொடங்கவேண்டிய விதிமுறைகளைக் குறிப்பிடுகிறார்.

அதாவது நர்த்தகி மங்களநீராடித்தன்னை நல்ல ஒப்பனையினால் அலங்கரித்துக் கொண்டு, பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட நன்னாளில், சுபமுகூர்த்தத்தில் முற்பகலில் நாடக அரங்கத்தில் (சபையில்) பல்வேறு பண்டிதர்கள் குழுமியிருக்க, விநாயகர், ஸரஸ்வதீ, சிவன், பார்வதி, பிரும்மா, விஷ்ணு, லக்ஷ்மி, லோகபாலகர்கள், ஸித்த வித்யாதரர்கள், பலவித வாத்யங்கள் இவைகளை முறையே வணங்கித் தன் பொருளாதார வசதிக்கேற்ப ஆசிரியரைக் கௌரவித்து வணங்கித் தொடர்ந்து ஏனைய முக்கியப் பெரியோர்களையும் வணங்கி ஆசி பெற்று ஆடலைத் தொடங்கவேண்டும் என்ற விதிமுறை நன்கு விளக்கப்பட்டுள்ளது.

பிருந்தலக்ஷணம் :

ஓர் ஆடல் நிகழ்ச்சிக்குப் பிரதான நர்த்தகர்களும் மற்றும் ஓர் வாத்தியக்குழுவும் தேவை. இந்நிகழ்ச்சிக்குப் பெண்டிர்களில் இருவர் பின்னணி இசைக்க, இருவர் குழலூத, ஒருவர் காஹள வாத்தியம் முழங்க, ஒருவர் தாளம்போட நிகழ்ச்சியின் துவக்கத்தில் ஒவ்வொருவராக பிருந்த (கோஷ்டி) கானத்தை இசைத்துத் தொடர்ந்து இரு இரு மடங்குகளாக இவ்வாறு மேளம் கட்டவேண்டும் இந்த கோஷ்டியில் ஒரு அம்புஜிகனும், ஓர் ஆண் பாடகரும் இடம் பெறுவர். இதன்றித் தேவைக்கு ஏற்ப இவ்வாத்தியக் குழுவை அதிகரித்து அல்லது குறைத்து அமைத்துக் கொள்ளலாம்.

ஸாமாஜிக (சபையோர்) லக்ஷணம் :

சபையோர் நல்ல அறிவாளிகளாகவும் கலை ரஸனையுள்ளவர்களாகவும், தூயமனம் கொண்டவர்களாகவும், குண தோஷங்களை அறிபவர்களாகவும், பொறாமையற்றவர்களாகவும், நற்குணம் பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும் என்பதைக்கூறி அத்துடன் சபாபதி

எவ்வாறு இருக்கவேண்டும், சபா மண்டபம் எவ்வாறு அமையவேண்டும் என்பதும் தெளிவாக விளக்கப்பட்டது.

நாட்டிய அரங்கு :

கொலு மண்டபத்தில், சிங்காதனத்தில் அரசன் கிழக்கு நோக்கி அமர்ந்திருக்க வேண்டும். அரசனது வலதுபுறம் ராஜகுமாரர்களும், மஹாமாத்ரர்களும் அமர வேண்டும். அரசனின் இடக்கைப்புறம் நாட்டிய சாஸ்திரம் மற்றும் ஏனைய மொழி சாஸ்திர பண்டிதர்கள், மாகதர்கள், வந்திகள், நடர்கள் அமர்ந்திருத்தல் வேண்டும். அரசருக்கு மேற்கே நல்ல அழகிளான ஒப்பனை செய்து கொண்ட சேவாகர்த்ரிகள், (பணிப் பெண்கள்) மற்றும் அழகிய யுவதிகள் உட்கார்ந்திருக்க வேண்டும். அரங்கமேடையின் தென்புறத்தில் பின்னணிப் பாடகர்களும், பாடகிகளும், வடபுறம் மிருதங்கம் முதலிய வாத்யக்காரர்களும், முன்புறம் நர்த்தகிகளும், தாளம் போடுபவர்களும் அமரவேண்டும். இதுவன்றி உசிதப் படி அந்தந்த நேரத்தில் இடையே ஆடல் புரிபவர்கள் அரங்கத்தில் பிரவேசிக்க வேண்டும். ஆடல் நிகழ்ச்சி தொடங்கும் முன், சேர்ந்து வாத்யக் குழுவினரின் கான ஒலி இசைக்கப்பட்டு பின்னர் சப்தம், தாளம் இவை களோடு கூடிய பாடல்கள், அடுத்துத் திரை திறக்கப்பட்ட வுடன் நர்த்தகீ அல்லது நர்த்தகன் தோன்றி புஷ்பாஞ்சலி செய்து அபிநயம் செய்யத் தொடங்க வேண்டும். இவ் வாறு ஓர் ஆடல் நிகழ்ச்சியினை நடத்தவேண்டிய முறை சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது.

முடிவுரை

இந்த நூலின் இறுதியில், காவ்ய நிருத்த ரஸத்தைத் தழுவும் நான்கு விருத்திகளையும் குறிப்பிட்டு, சிருங்காரம் விப்ரலம்ப சிருங்காரம், ஹாஸ்யம் இந்த ரஸங்களைக் கொண்டதும், ஸாம வேதார்த்தம் கொண்ட விருத்தியை

''கைசிகீ'' விருத்தி என்றும், பயானகம், பீபத்ஸம் ஆகிய இரு ரஸங்களைக்கொண்ட அதர்வண வேதார்த்தம் கொண்ட விருத்தியை ''ஆரபடீ'' விருத்தி என்றும், வீரம், ரௌத்ரம், அத்புதம் ஆகிய ரஸங்களைக்கொண்ட யஜுர் வேதார்த்தம்கொண்ட விருத்தியை ''ஸாத்வதி'' என்றும், கருணரஸம் கொண்ட ருக்வேதார்த்தம் கொண்ட விருத்தியை ''பாரதீ'' என்றும், சாந்தம், அத்புதம் ஆகிய ரஸங்களைக் கொண்ட விருத்தியை ''ப்ராம்ஹீ'' விருத்தி என்வும் வகைப்படுத்தி காந்தர்வ வேதம் என போற்றப் படும் இந்நாட்டியக்கலை நான்கு வேதங்களின் ஸாரமே என்று தெளிவுபடுத்தியுள்ள நூலாசிரியர் தன் நூலை மங்கள சுலோகத்துடன் நிறைவுபெறச் செய்துள்ளார்.

நூலின் தனிச் சிறப்பு :-

ராக லக்ஷணங்கள், வாத்ய லக்ஷணங்கள், காயக லக்ஷணங்கள் போன்ற இசைத் தொடர்பான விஷயங் களைச் சற்றும் அணுகாமல் அபிநய சாஸ்திரத்தை மட்டும் தன் நூலில் நூலாசிரியர் கையாண்டுள்ளார், இவர் தம் கருத்துப்படி லக்ஷணங்களைக் கூறுமிடத்து ஏனைய நூலாசிரியர்களின் கருத்துக்களையும் நமக்குத் தெளி வாக்குகிறார். அங்க லக்ஷணங்களில் ஹஸ்த லக்ஷணங் களே விரிவாகப் பேசப்பட்டுள்ளன. எளிய நடையில் தெளிவாகத் தம் நூலைச் சமைத்துள்ளார். நாட்டியக் காரர்கள் அரங்கத்தில் நிற்கவேண்டிய இடங்கள், உள்ளே பிரவேசிக்க வேண்டிய முறைகள், அரங்கம் அமைக்கப்பட வேண்டிய விதம் இவற்றை மிகத் தெளிவாக நூலாசிரியர் கூறியுள்ளது போற்றத் தக்கதாகும். மற்றும், தன் நூலின் இறுதியில் ரஸ நிர்ணயம் பற்றிச் சுருங்கக் கூறியதுடன் ஸம்ஸ்கிருதபாஷை இலக்கண சம்பந்தமாகத் தேவையான சிறு குறிப்புக்களையும் கொடுத்துள்ளார். நிறைவாகத் தன் முன்னோர்களான ஸங்கீத சாஸ்திர ப்ரவர்த்தகர்களில் சிலரைப் பற்றிப் பிரஸ்தாபித்துத் தன் நூலை இனிதே முடிக்கிறார்.

இந்நூலைப் பதிப்பித்துள்ள முறை :

ஸரஸ்வதிமகாலின் ஸம்ஸ்கிருதப் பிரிவில் தெலுங்கு எழுத்திலமைந்த ஓலைச் சுவடியை (B. No. 11513 D. No. 10727) அடிப்படையாகக்கொண்டு இந்த நூல் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. இந்தச் சுவடியொன்றே முற்றுமுள்ள சுவடியாகும். இதனைத் தவிர இரண்டு காகிதச்சுவடி (B. No. 6646; 6655) களும் ஒரு ஓலைச் சுவடி (B. 11514 (a)யும் உள்ளன. ஆனால் இவை மூன்றுமே முழுமை பெறாதவை. ஆயினும் இந்தச் சுவடிகளும் இப்பதிப்பிற்குப் பயன்படுத்தப் பெற்றுள்ளன.

இந்த நூலில் காணப்படும் கருத்துக்களை மிகவும் சுருக்கமாக முன்னுரையிலேயே தமிழிலும், ஆங்கிலத்திலும் கொடுக்கப் பெற்றுள்ளன.

நன்றியுரை :-

இவ்வரிய நூலை முதன்முதலாக அச்சில் கொண்டு வரும் பணியை எனக்கு நல்கிய சரஸ்வதிமகால் நூலக நிர்வாகக் குழுவுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நூலுக்குப் பாடபேதம் மற்றும் பதிப்பின்போது ஏற்பட்ட ஐயங்கள் நீங்க, மூலச்சுவடியுடன் ஒப்பிட்டு உதவிபுரிந்த நூலகத் தெலுங்குமொழிப் பண்டிதர் பிர்ம்மஸ்ரீ N. விஸ்வநாதன் அவர்களுக்கும், பிழைகள் மலிந்துள்ள இந்த நூலின் பிரதியில் அச்சகப் படியை மூலச்சுவடியுடன் ஒப்பிட்டு சாத்தியமான திருத்தங்களைச் செய்தும், அச்சுப் பிரதிகளைத் (Proof) திருத்தியும் உதவிபுரிந்த இந்நூலக மேநிலை ஸம்ஸ்கிருத பண்டிதர் பிர்ம்மஸ்ரீ தேதியூர் S. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் விரைவில் வெளிவர உதவி நல்கிய இந் நூலக இயக்குநர் திரு. மு. சதாசிவம், M. A., M. Phil., அவர்களுக்கும், வெளியீட்டு மேலாளர் திரு. அ. பஞ்ச நாதன் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலைப் பற்றிய எனது ஆய்வுக்காக நூலகம் வரும்போழ்தெல்லாம் இன்முகம் காட்டி பல்வேறு உதவி களைப் புரிந்துவரும் நூலக ஊழியர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நூலைச் சிறப்பாக அச்சிட்டளித்த 'லக்மி பிரிண்டர்ஸ்' தஞ்சாவூர், அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வாசக அன்பர்கள் நல்ல பல கருத்துக் களை ஏற்றுப் பயன்பெற விரும்புகிறேன். இதில் திருத்தம் பெறவேண்டிய பிழைகள் இருக்கவே செய்கின்றன. ஸம்ஸ்கிருதமொழிப் புலமையுடன் நாட்டியக் கலையறிவும் பெற்ற அறிஞர்கள் அவற்றைத் திருத்தம் செய்து எழுத வேண்டுகிறேன். அது, இந்நூலை மறுபதிப்புச் செய்யும் போது திருந்திய பதிப்பாக வெளிவர உதவுமென்று நம்புகிறேன்.

எஸ். வேங்கடராமன்,
சிறப்புக்கேண்மை பதிப்பாசிரியர்
சரஸ்வதி மகால் நூலகம்.

மேலவீதி,
தஞ்சாவூர்-9.

ABOUT SANGEETHA MUKTHAVALI :

Dancing in India is not merely an entertainment to enjoy but a fine art worthy of reverential study and understanding. It is of a very ancient mythological origin.

Our India has a rich literature on dancing in Sanskrit and all the vernaculars as well. Even from the early time of Bharatha's Natya Sastra (4th B. C.) we had a good number of writers on dancing. Of the sixty four arts, the twin arts of Sangita and Natya occupy the unique position in our Indian culture. These two are not only categorised as arts, but also as science. They are arts in the sense they are subject to changes depending upon the individual taste and time and place of the people they live with a combination of sounds in a beautiful form having the effect of producing pleasant expression of emotions. Having some constant laws and orders of discipline with systematic principles and procedures Sangeetha and Natya adorn the seat of science on the other hand. No festivals and celebrations in a Hindu human life right from the cradle to the burial, are there without the fragrance of music and dance in one way or the other.

Music enjoys the greatness of Holy Veda by name " Gandharva Veda ".

Taking " Patya " from Rigveda, action from Yajur Veda, music from Sama Veda and enjoyment or Rasa from Atharva Veda, the art of music and dance

enjoy unpeachable dignity with spiritual and cultural value.

Bharatha, graced by Lord Brahma with the upadesa on dancing, staged dance with Gandharvas and Apsaras in the presence of Lord Parameswara. And, hence, the art of dancing was named after Bharatha. Further, the three letters "Bha" "Ra" "Tha" themselves represent the combination of Bhava, Raga and Thala which are the basic and indispensable requirements for a dance performance.

Sarngadeva, a reputed author of Sangeetha Ratnakara opines that the Bhavabinaya with different kinds of " Hastha Mudras " is called Nrithya. In good olden days, only nataka with Nritya was called Natya. In other words, the Nataka was enaoted only with the dialogue in Poetic verses and not on prosody. In Sanskrit dramas, to say - " a drama was enacted", it was said that the drama was danced". Here In Tamil Nadu also there are some ancient dramas of this type of which Kuravanchi Natakam is Popularly known. The word Nataka connotes Drama, Natya and Nataka are both derived from the root 'Nat' meaning " to imitiate ". Nrutya is a derivation from the root "Nrit" cannoting dance.

The dance without exhibiting either Rasa or Bhava but giving due importance to tala discipline alone is called Nritta. Nritya is one comprised of Nritta and gesture (Abhinaya). Thandava is the masculine dance while lasya is the faminine one.

Indeed, we are proud of having good number of works on the subject " Dance " by various scholars of different periods and of different parts of our country. Sangeetha Muktavali is one of the rare works in Sanskrit by Devanacharya who adorned the court of Prowda Devaraya of Vijaya Nagar in 15th Century A. D. It is also said that " Smrithi Chandrika " is also another work by the same author. It is clear that he was also well known by name Devendra Charya. Although the life history of this great author is not available, we have sufficient proof to say that he was a student of one Rudra a great poet of that period. Devanacharya calls himself with great proud as Thowryatrika Chintamani :- That is to say - "gem in the arts of Dance, Vocal Music and instrumental music ".

Even though the word Sangeetha Sastra includes music and dance in general, here our author deals with dance in his work. ' Sangeetha Muktavali '' leaving the subject music untouched.

ABHINAYA NIRNAYAM :

The author In this work Sangeetha Mukthavali first deals with Abhinaya Nirnaya. Abhinaya means dancing with bhavas of Nava rasas arising from Sathvika, Rajasa and Thamasa gunas. This is of four kinds viz., Angika, Vachika, Aharya and Sathvika. Dancing with influence of the limbs say anga, Pratyanga and Upanga is called Angika dancing, while Vachika is one which is danced in a systematic manner with reference to the pronounciation, sound melody and language diction. The Angika deals not

only with the actor's dress and make up, but also with race, religion, the position in the society etc., In Satvikabhinaya expression of eight kinds of human moods are dealt with.

Nritta is classified into four parts viz., Prerana, Prenkana, Kundali and Dandarasaka.

Devanacharya after defining 21 kinds of head movements, describes "Hastha Lakshana" and Nrittanga Lakshana. Then five kinds of chest, five kinds of hip action, fifteen kinds of foot and twenty kinds of foot steps are explained with lakshanas. The author concludes the explanation of lakshanas in regard to the prominent parts of nruttanga with a brief description of shoulders of the actress.

While dealing with Pratyanga, the author explains ten kinds of neck, 22 kinds of arms, 4 kinds of back, 5 kinds of abdomal, ten kinds of knees, 7 kinds of knee joints and seven kinds of wrist.

And then, he describes various limbs found in the face of the actress. (Upangas) viz., 36 kinds of eyes 7 kinds of eye brows 9 kinds of eye lash and 17 kinds of action of eye pupil to suit the exhibition of various rasas to the audience.

Next, 6 kinds of cheek, 6 kinds of nose and breathing, various kinds of palate, 8 kinds of teeth action and 6 kinds of tongue. 6 kinds of foot fingers, 6 kinds of foot are explained nicely.

Here, in this Sangeetha Muktavali, we have short notes on face lotion of various colours to be used to exhibit different rasas and the place at the stage where the actress should stand both at the beginning and conclusion of dance performance.

Explaining briefly 16 kinds of Bhoomi Gathi and 16 kinds of. Akasiki Gathi, the author gives wider scope of dancing by name Desi Nrittam to suit the taste and customs of different parts of the country in their own language. In this kind of Desi Nrittam also, he points out 45 kinds of Bhowmya Gathi and 20 kinds of Akasiki Gathi.

Then 125 kinds of Marga Karna which form part of dancing are referred to sweetly in short. To our great interest, we find a descriptive procedure to be adopted in the first instance before commencing a dance perrormance at the stage. Besides, the qualities of Orchestra and the audience are descriped particularly.

It is also a point to be appreciated that the actual seating arrangements of the King, Queen, Ministers, courtiers, Pandits and the play back are nicely explained in this Sangeetha Muktavali.

To conclude this work, Devanacharya asserts that this art of dancing is nothing but the Gandharva Veda which is a treasure for our Indian Culture and Civilisation.

Sangeetha Muktavali comes to a happy close with the Mangala Sloka on Lord Parameswara.

—0—

॥ श्रीः ॥

॥ विषयानुक्रमणिका ॥

பொருளடக்கம்

வரிசை எண்		பொருள்	பக்கம்
1	अभिनयनिर्णयः	அபிநயநிர்ணயம்	1
2	नृत्तभेदाः	அபிநய வகைகள்	8
3	,, प्रेरणम्	,, ப்ரேரணம்	9
4	,, गुण्डलिः	,, குண்டலி	10
5	,, गीतपद्धतिः	,, கீதபத்ததி	11
6	,, वाद्यपद्धतिः	,, வாத்யபத்ததி	12
7	शब्दपद्धतिः	சப்தபத்ததி	12
8	ताललक्षणम्	தாளலக்ஷணம்	13
9	शब्दप्रबन्धपद्धतिः	சப்தபிரபந்தபத்ததி	
	अ ,, मन्यकम्	,, மன்யகம்	14
	आ ,, पुष्पपुटः	,, புஷ்பபுடம்	15
	इ ,, खण्डजतिः	,, கண்டஜதி	15
	ई ,, झङ्कारः	,, ஜங்காரம்	16
	उ ,, यतिविलासः	,, யதிவிலாஸம்	16
	ऊ ,, तुडुका	,, துடுகா	16
	ऋ ,, रुगवणी	,, ருகவணீ	17

வரிசை எண்		பொருள்	பக்கம்
10	नृत्ताङ्गानि	நிருத்தாங்கங்கள்	18
11	पात्रलक्षणम्	பாத்ரலக்ஷணம்	21
12	नृत्यम्	நிருத்யம்	22
13	नृत्यभेदनिर्णयः	நிருத்யவகைகள் பற்றி	23
14	नृत्ताङ्गप्रत्यङ्गानि	,, அங்கப் பிரத்யங்க வகைகள்	24
15	शिरोभेदाः	,, தலை அசைவு வகைகள்	25
	अ ,, धुतं विधुतम्	,, துதம், விதுதம்	26
	आ ,, आधूतम्	,, ஆதூதம்	26
	इ ,, कम्पितम्	,, கம்பிதம்	26
	ई ,, आकम्पितम्	,, ஆகம்பிதம்	26
	उ ,, उद्वाहितम्	,, உத்வாஹிதம்	27
	ऊ ,, परिवाहितम्	,, பரிவாஹிதம்	27
	ऋ ,, अंञ्चितम्	,, அஞ்சிதம்	27
	ॠ ,, किंलिकिञ्चितम्	,, கிலிகிஞ்சிதம்	28
	ऌ ,, उत्क्षिप्तम्	,, உத்க்ஷிப்தம்	28
	ॡ ,, अधोमुखम्	,, அதோமுகம்	28
	ए ,, लोलितम्	,, லோலிதம்	28
	ऐ ,, स्कन्धानतम्	,, ஸ்கந்தாநதம்	28
	ओ ,, आरात्रिकम्	,, ஆராத்ரிகம்	29
	औ ,, समम्	,, ஸமம்	29
	अं ,, पार्श्वाभिमुखम्	,, பார்சுவாபிமுகம்	29

வரிசை எண்	பெயர்		பக்கம்
16	हस्तभेदाः	அபிநயத்தில் கை அசைவு வகைகள்	29
अ)	,, पताकात्रिपताकौ	,, பதாகை-திரிபதாகை	36
आ)	,, कर्तरीमुखम्	,, கர்த்தரீமுகம்	36
इ)	,, अर्धचन्द्रः	,, அர்தசந்திரம்	37
ई)	,, अरालः	,, அராளம்	39
उ)	,, शिखरः	,, சிகரம்	41
ऊ)	,, कपित्थम्	,, கபித்தம்	42
ऋ)	,, कटकामुखः	,, கடகாமுகம்	42
ॠ)	,, शुकतुण्डः	,, சுகதுண்டம்	43
ऌ)	,, काङ्गूलः	,, காங்கூலம்	44
ॡ)	,, पद्मकोश·	,, பத்மகோசம்	45
ए)	,, अलपल्लवः	,, அலபல்லவம்	46
ऐ)	,, सूचीमुख·	,, ஸூசீமுகம்	47
ओ)	,, सर्पशिराः	,, சர்ப்பசிரஸ்	48
औ)	,, चतुरः	,, சதுரம்	49
अं)	,, मृगशीर्षः	,, மிருகசீர்ஷம்	51
अः)	,, हंसाद्यः	,, ஹம்ஸாத்யம்	51
क)	,, हंसपक्षः	,, ஹம்ஸபக்ஷம்	52
ख)	,, भ्रमरः	,, ப்ரமரம்	53

வரிசை எண்	பெயர்		பக்கம்
	हस्तभेदाः		
ग]	,, मुकुलः	அபிநயத்தில் முகுளம்	53
घ]	,, ऊर्णनाभः	,, ஊர்ணநாபம்	54
ङ]	,, सन्देशः	,, சந்தேசம்	54
च]	,, ताम्रचूडः	,, தாம்ரசூடம்	56
छ]	,, वरदाभयौ	,, வரதாபயம்	56
ज]	,, निकुञ्चकः	,, நிகுஞ்சகம்	56
झ]	,, द्विशिखरः	,, த்விசிகரம்	56
ञ]	,, बाणहस्तः	,, பாணஹஸ்தம்	57
ट]	,, मयूरः	,, மயூரம்	57
ठ]	,, अर्धपताकः	,, அர்தபதாகம்	57
ड]	,, सूचीहस्तः	,, ஸூசீஹஸ்தம்	57
ढ]	,, संयुतहस्ताः	,, ஸம்யுதஹஸ்தங்கள் (கைகள் இணைத்து செய்யப்படும் அபிநயங்கள்)	58
17	पुष्पपुटादीनां लक्षणप्रयोगादयः	புஷ்பபுடம் முதலானவற்றின் இலட்சணங்களும் பிரயோக வகைகளும்	58
अ]	,, पुष्पपुटः	,, புஷ்பபுடம்	59
आ]	,, अञ्जलिः	,, அஞ்ஜலி	59
इ]	,, कपोतः	,, கபோதம்	59

வரிசை எண்.	பெயர்		பக்கம்
	पुष्पपुटः	புஷ்பபுடம்	
	ई] ,, कर्कटः स्वस्तिकश्च	,, கர்க்கடமும் ஸ்வஸ்திகமும்	59
	उ] ,, डोलः	,, டோலம்	60
	ऊ] ,, मकरः	,, மகரம்	60
	ऋ] ,, वर्धमानकः	,, வர்தமானகம்	60
	ॠ] ,, गजदन्तः	,, கஜதந்தம்	61
	ऌ] ,, कटकावर्धमानकः	,, கடகாவர்தமானகம்	61
	ॡ] ,, निषदः	,, நிஷதம்	61
	ए] उत्सङ्गः	உத்ஸங்கம்	61
	ऐ] अवहित्थः	அவஹித்தம்	62
	ओ] पताका	பதாகா	62
18	अथ नृत्तहस्ताः	நிருத்தத்தில் கை அசைவு வகைகள்	63
19	चतुरश्रादिलक्षणप्रयोगाः	சதுரச்ரம் முதலானவற்றின் இலக்கணமும் பிரயோக விளக்கமும்	64
	अ] ,, चतुरश्रौ	,, சதுரச்ரங்கள்	64
	आ] ,, उद्वृत्तौ	,, உத்விருத்தம்	64
	इ] ,, तालमुखौ	,, தாளமுகங்கள்	64
	ई] ,, अरालकटकामुखौ	,, அராளகடகா முகங்கள்	64
	उ] ,, सूच्यास्यौ	,, ஸூச்யாஸ்யங்கள்	65

வரிசை எண்	பெயர்		பக்கம்
चतुरश्रादिलक्षण		சதுரஸ்ரம்	
ऊ]	,, अर्धरेचितौ	,, அர்தரேசிதங்கள்	65
ऋ]	,, नितम्बौ	,, நிதம்பங்கள்	65
ॠ]	,, पल्लवौ	,, பல்லவங்கள்	65
लृ]	,, केशबन्धौ	,, கேசபந்தங்கள்	65
लॄ]	,, लताहस्तौ	,, (கொடி) லதா ஹஸ்தங்கள்	66
ए]	,, करिहस्तौ	,, (Elephant) கரிஹஸ்தங்கள்	66
ऐ]	,, अधस्तलौ	,, அதஸ்தலங்கள்	66
ओ]	,, पक्षप्रद्योतकौ	,, பக்ஷப்ரத்யோதங்கள்	66
औ]	,, दण्डपक्षौ	,, தண்டபக்ஷங்கள்	66
अं]	,, गरुडपक्षौ	,, கருடபக்ஷங்கள்	67
अः]	,, ऊर्ध्वमण्डलिनौ	,, ஊர்த்வமண்டலிகள்	67
क]	,, पार्श्वमण्डलिनौ	,, பார்சுவமண்டலிகள்	67
ख]	,, उरोमण्डलिनौ	,, உரோமண்டலிகள்	67
ग]	,, उर.पार्श्वार्धमण्डलौ	,, உர:பார்சுவார்த மண்டலங்கள்	68
घ[	" मुष्टिकस्वस्तिकौ	,, முஷ்டிகஸ்வஸ்திகம்	68
ङ]	" नलिनीपद्मकोशकौ	,, நளினீ பத்மகோசம்	68
च]	" अलपद्मौ	,, அல்ப்பபத்மம்	68

வரிசை எண்		பெயர்	பக்கம்
	चतुरश्रादिलक्षण	சதுரஸ்ரம்	
	छ] " उद्वणौ	,, உத்வணம்	69
	ज] " ललितौ	,, லலிதம்	69
	झ] " लक्षितौ	,, லக்ஷிதம்	69
	ञ] " रेचककरणानि	,, ரேசககரணங்கள்	69
20	पञ्चदश हस्तप्रचाराः	15 வகை கை அசைவுகள்	70
21	हस्तक्षेत्राणि	ஹஸ்தக்ஷேத்ரங்கள்	70
22	करप्रचाराः	கரப்ரசாரங்கள்	70
23	विंशतिः हस्तकर्माणि	20வகை ஹஸ்தகர்மங்கள்	71
24	पञ्चविधाः वक्षोभेदाः तेषां लक्षणानि प्रयोगाश्च	ஐவகை வக்ஷோ (Chest) பேதங்களும்	71
		அவற்றின் இலக்கணமும் செய்முறைகளும்	71
	अ] आभुग्नम्	ஆபுக்னம்	71
	आ] निर्भुग्नम्	நிர்புக்னம்	71
	इ] प्रकम्पितम्	ப்ரகம்பிதம்	72
	ई] उद्वाहितम्	உத்வாஹிதம்	72
25	पञ्चविधाः पार्श्वभेदाः	ஐவகை பார்சுவ (Side) அசைவுகள்	72
	अ] ,, उन्नतम्	,, உன்னதம்	72

வரிசை எண்		பெயர்	பக்கம்
	पञ्चविधा	ஐவகை பார்சுவ	
	आ] " प्रसृतम्	" ப்ரஸ்ருதம்	72
	इ] " विवर्तितम्	" விவர்த்திதம்	72
	ई] " अपसृतम्	" அபஸ்ருதம்	73
26	पञ्चविधकटिभेदाः	ஐவகை இடைஅசைவுகள்	73
27	षड्विधाश्चरणभेदाः	6 வகை அடிவைப்புக்கள்	73
	अ] " समः	" ஸமம்	73
	आ] " कुञ्चितः	" குஞ்சிதம்	73
	इ] " सूची	" ஸூசீ	73
	ई] " अग्रतलसञ्चारः	" முன்பாதத்தால் சஞ்சாரம்	74
	उ) " उद्घट्टितः	" உத்கட்டிதம்	75
	ऊ) " अञ्चितः	" அஞ்சிதம்	75
28	चतुर्विंशतिः पादचाराः	24வகையிலான நடைகள்	76
29	सप्तविधाः स्कन्धभेदाः	7வகை தோள்அசைவுகள்	77
30	ग्रीवा भेदाः	கழுத்து அசைவு வகைகள்	79
31	द्वाविंशतिविधाः बाहुभेदाः	22 வகை புஜ அசைவுகள்	80
32	चतुर्विधाः पृष्ठभेदाः	நான்குவகைப் பின்னிடை (Back Side) அசைவுகள்	84
33	पञ्चविधा उदरभेदाः	ஐவகை உதர (வயிறு) அசைவுகள்	85

வரிசை எண்	பெயர்		பக்கம்
34	पञ्चविधा ऊरुभेदाः	ஐவகை துடை அசைவுகள்	86
35	दशविधा जङ्घाभेदाः	பத்துவகை அடிக்கால் (from the ankle to the knee) அசைவுகள்	87
36	पञ्चविधा मणिबन्धभेदा;	ஐவகை மணிக்கட்டு (மணி பந்த) அசைவுகள்	87
37	जानुभेदाः	முழங்கால் (Knee) அசைவுகள்	88
38	दृष्टिभेदाः (रसदृष्टयः)	உணர்வுபூர்வமான பல்வகைப் பார்வைகள்	89
39	स्थायीभावदृष्टिभेदाः	பாவபூர்வமாகப் பார்த்தலின் வகைகள் (with transitary feelings)	91
40	व्यभिचरिदृष्टिभेदाः	வியபிசாரிபாவதிருஷ்டி பேதங்கள்	93
41	मदिरादृष्टिमेदाः	மது அருந்தியதால் மாறிய பார்வை வகைகள்	95
42	भ्रूभेदाः	புருவ அசைப்பு வகைகள்	96
43	पुटभेदाः	புடபேதங்கள்	97
44	ताराकर्माणि	நக்ஷத்திரச் செயல்கள்	98
45	विषयाभिमुखताराकर्माणि	விஷயாபிமுகமான கருவிழியசைவுகள்	98
46	षड्विधौ कपोलौ	ஆறுவகைக் கன்னப் பகுதிகள்	99
47	षोढा नासिका	16 வகைப்படும் மூக்கு	100
48	नवधा श्वासाः	ஒன்பது வகையிலான சுவாஸங்கள் (Breathing)	101

வரிசை எண்	பெயர்		பக்கம்
49	पक्षे दशश्वासाः	பத்துவகை சுவாஸங்கள் என்றும் ஒரு மதம்	103
50	चिबुकम् (चुवुकम्)	வாயின் வெளிப்புற அடிப் பகுதி (the chin)	104
51	वदनम्	முகம்	105
52	गुल्फभेदाः	கணுக்கால் (The ancle) வகைகள்	107
53	ओष्ठभेदाः	உதடு வகைகள்	107
54	दन्तकर्माणि	அபிநயத்தில் எட்டுவகையில் பற்களைப் பயன்படுத்துவது பற்றி	108
55	जिह्वाभेदाः	அபிநயத்தின் நாக்கின் பயன் வகைகள்	109
56	अङ्गुलिभेदाः	விரல்களின் வகைகள்	109
57	चरणतलभेदाः	உள்ளங்கால் வகைகள்	109
58	मुखरागः	உணர்ச்சியை வெளிப் படுத்தும் முகபாவம் (Colour of the face expressing various feelings, love, affection, desire, joy, sorrow etc.)	110

வரிசை எண்.	பெயர்		பக்கம்
59	स्थानलक्षणम्	அபிநய ஆரம்பத்திலோ இடையிலோ, முடிவிலோ நிற்கும் முறை பற்றி	111
60	आसनलक्षणम्	விஷ்கம்பிதம், உத்கடம், குக்குடம் முதலான ஆஸன லக்ஷணம்	118
61	चारीभेदाः	அரங்கப் பகுதிகளில் அபிநயாங்கமான பலவகை நடைகள் (Steps) பற்றி	120
